[24th March 1961

The Hon. Sri R. VENKATARAMAN : எனக்கு பீடியும் தெரியாது, சுருட்டும் தெரியாது ; இரண்டும் தெரியாது. ஆனால் பீடியும் சுருட்டும் ஒன்றுதான், சிகார்தான் வேறு.

Sri S. M. ANNAMALAI : சென்னை உயர்நீதி மன்றத்திலே இப்படிப் பட்ட வழக்கு சென்று, அதன் மூலமாக பீடி முதலாளிகள், மத்திய கண்ட்ராக்டர்களை வைத்து, தொழிலாளிகளை அவர்கள் மூலம் வைத்து, இந்த சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல என்ற முறையில் செய்ததால், கனம் அமைச்சர் சொன்னபடி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வது அவசியமில்லை என்றும், மத்திய சர்க்காரே இதுபற்றி யோசித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு மத்தியில் இதனால், தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால், இப்பொழுது இருக்கும் பீடி இண்டஸ்ட்ரியல் ப்ரிமிஸஸ் ஆக்ட் பிரகாரம், யார் ரெஜிஸ்டர் செய்யவேண்டும் என்ற பிரச்சினை வரும்போது ட்ரேட் மார்க் ஒனர் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமா, செய்ய வேண்டாமா என்ற பிரச்சினை எழுந்தது. இதற்கு மத்தியில் எந்தக் கஷ்டமும் தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை.

Sri K. VINAYAKAM : Instead of approaching the Central Government to amend the Factories Act to suit the provisions of our Beedi Workers' Act, would it not be a better step to consider once again our Beedi Workers' Act and amend it to suit the Factories Act ?

The Hon. Sri R. VENKATARAMAN : This is in the Concurrent List. Whether you amend the Beedi Act or the Factories Act, the concurrence of the Government of India has to be obtained.

Sri S. M. ANNAMALAI : புகையிலை லைசென்ஸ் கொடுக்கும்போது, மத்திய சர்க்காரை வற்புறுத்தி, யார் யார் பீடி பாக்டரிகளை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுந்தான் புகையிலை லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்த நம் சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

DEPUTY SPEAKER : How does this arise out of the main question ?

The Hon. Sri R. VENKATARAMAN : Still I shall answer that. கனம் அங்கத்தினர் சொல்வதற்குப் பல மாதங்களுக்கு முன்பே, மத்திய சர்க்காருக்கு எழுதி, அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்ல, தொழில் சம்பந்தமாக விதிகள் தொழில் சட்டத்தோடும். தொழிலாளிகள் சம்பந்தமாக தொழிலாளிகள் சட்டத்தோடும் விதிகள் இணைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

Dam across Mangarai River.

* 1041 *Q.*—Sri M. A. B. ARUMUGHASAMY : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ஆண்டு டிசம்பர் மீ 19-ம் தேதியில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில், ஆத்தூர் தொகுதி கோடல்வாவி மற்றும் சுற்றுவட்டார கிராம பொது மக்கள் சார்பாக மாங்கரை ஆற்றில் ஓர் அணை கட்டி அதன் மூலம் சுமார் 1,500, 2,000 ஏக்கர் பாசனவசதி செய்து கொடுக்கும்படி மகஜர் கொடுக்கப்பட்டதா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.